October 2020

WORKERS' ACTION CENTRE

# கோவிட்-19 இடர்மீட்பு கொடுப்பனவு தகவல் தாள்

## 3 புதிய கோவிட்-19 வருமான உதவிகள்

அக்டோபர் 2020 தொடக்கம் அமுலுக்கு வந்த பல புதிய கோவிட்-19 இடர்மீட்பு கொடுப்பனவுகள் தொடர்பான அறிவித்தலை சமஸ்டி அரசு வெளியிட்டது. அக்கொடுப்பனவுகள் யாவை, அவற்றை எவ்வாறு பெறுவது, எவ்வளவு காலத்திற்கு அவை அமுலில் இருக்கும் என்பது பற்றி இத்தகவல் தாள் விளக்குகின்றது. இது தொடர்பில் என்ன செய்வது அல்லது வேறு ஏதாவது கேள்விகள் இருக்குமாயின் நீங்கள் எங்களை தொழிலாளர் நடவடிக்கை நிலையத்தின் 416- 531-0778 இல் அழைக்கலாம்.

1.**கனடா இடர்மீட்பு கொடுப்பனவு:**
தொழில் காப்புறுதிக்குத்தகுதி பெறாத, மற்றும் வேலைக்கு போவதை நிறுத்திக்கொண்ட அல்லது சராசரி கிழமை வருமானத்தில் 50 வீதத்தினை இழந்த தொழிலாளர்களுக்கானது.

2. **கனடா இடர்மீட்பு சுகயீன கொடுப்பனவு:**
சுகயீனம் காரணமாக தமது கிழமைக்கான வேலை அட்டவணையில் 50 % த்தினை செய்யமுடியாத அல்லது கோவிட்-19 காரணமாக சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டவர்கள் அல்லது கோவிட்- 19 யினால் தாக்கப்படுவதற்கு ஏதுவான உடல்நிலையைக்கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கானது.

3. **கனடா இடர்மீட்பு பராமரிப்பாளர் கொடுப்பனவு:**
12 வயதுக்குக் குறைந்த குடும்ப அங்கத்தவர் ஒருவரை பராமரிக்க வேண்டியதனால் அல்லது அவருக்கான மேற்பார்வையின் அவசியம் காரணமாக தமது கிழமைக்கான வேலை அட்டவணையில் 50%த்தினை செய்யமுடியாத தொழிலாளர்களுக்கானது.

## கொடுப்பனவு களுக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?

கனடா வருமான இலாகா (CRA) இணையதளத்தின் My Account மூலம் நீங்கள் விண்ணப்பிக்கலாம். நீங்கள் தொலைபேசி மூலமும் 1-800-959-2019 அல்லது 1-800-959-2041 கட்டண இலவச தொலைபேசிக்கு காலை 6 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை (கிழக்கு நேரம் ET) அழைப்பதன் மூலம் விண்ணப்பிக்கலாம். இதற்கு உங்களது சமூகக்காப்புறுதி இலக்கம் (SIN), அஞ்சல்குறியீடு, மற்றும் பிறந்த திகதி தேவைப்படும்.

## நல்லவேளைத்தள உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் எவ்வாறு காரியங்களை ஆற்றுகிறோம்?

நாம் எமது பலதரப்பட்ட முயற்சிகளாலும் ஒருவருமே ஏழ்மை நிலைமையில் வாழக்கூடாது என அரசியல்வாதிகளுக்கு எடுத்துரைத்ததாலும் தொழிலாளர்கள் இவ்வாறான கோவிட்- 19 புதிய வருமான உதவிகளை வென்றெடுக்கக் கூடியதாக இருந்தது. மேலும் சம்பளத்துடன் கூடிய சுகயீன லீவு, நியாயமான சம்பளம், நல்ல சுகாதார, பாதுகாப்பு சட்டங்களுக்காகவும் நாம் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. தொழில் தளங்களில் அல்லது ஒன்ராறியோவில் நியாயமான வேலை சூழ்நிலைகளுக்காக நீங்களும் எங்களுடன் இணைந்து செயல்பட விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

WORKERS' ACTION CENTRE

October 2020

# கனடா இடர்மீட்புக் கொடுப்பனவு (CRB)

**பின்வரும் சந்தர்ப்பங்களில் நீங்கள் CRB க்குத் தகுதி பெறலாம்:**

- ☑ தொழில் காப்புறுதி நன்மைகளுக்கு தகுதி பெறவில்லை
- ☑ கோவிட் காரணமாக வேலைக்கு போவதை நிறுத்திக் கொண்டேன் அல்லது கிழமைக்கான வருமானத்தில் 50 வீதத்தை இழந்துள்ளேன். வேலையை விடவில்லை அல்லது தன்னிச்சையாக வேலை மணித்தியாலங்களை குறைத்துக் கொள்ளவில்லை
- ☑ வேலையைத் தேடிக் கொண்டிருப்பதுடன் நியாயமான வேலை ஒன்றினை தவிர்க்கவில்லை
- ☑ 15 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் கனடாவில் வாழ்கிறேன். கனேடிய பிரஜையாகவோ அல்லது நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவராகவோ இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் சமூகக் காப்புறுதி இலக்கம் (SIN) உண்டு
- ☑ கனடா இடர்மீட்பு சுகயீன கொடுப்பனவு, கனடா இடர்மீட்பு பராமரிப்பாளர் கொடுப்பனவு, குறுகியகால இயலாமை அல்லது தொழில்தள காயம் காரணமாக நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு எதனையும் தற்போது பெறவில்லை
- ☑ 2019ல்,2020ல் அல்லது முன்னைய 12 மாதங்களில் அல்லது சுய வருமானம் அல்லது பிள்ளைப்பேறு/தொழில் காப்புறுதி நன்மைகள் மூலம் ஆகக்குறைந்தது $5,000 வருமானம் ஈட்டினேன்

**CRB மூலம் எவ்வளவு பெறலாம்?**

ஒவ்வொரு 2 கிழமைக்கும் $1,000 பெறலாம். இதில் CRA 10% வரியினை பிடித்து வைத்துக்கொண்டு, $900 த்தினை வழங்கும். நீங்கள் அந்த வருடத்தில் எவ்வளவு வருமானத்தினை உழைத்தீர்கள் என்பதனைப் பொருத்து கூடிய அல்லது குறைந்த வட்டியினை வரி தாக்கலின்போது செலுத்த வேண்டியிருக்கும்.

நீங்கள் வேலை செய்துக் கொண்டே CRBயினைப் பெறலாம். ஆனால் வருட வருமானம்$38,000 யினை தாண்டுமாக இருந்தால் அதிகரித்த ஒவ்வொரு டாலருக்கும் 50 சதத்தினை வரித் தாக்கல் செய்யும்போது திருப்பி கட்ட வேண்டி இருக்கும்.
இக்காலப்பகுதியில்நியாயமான வேலை ஒன்றினை மறுத்தால்,10 கிழமைகளுக்கு நீங்கள் CRB யினை இழப்பீர்கள். அத்துடன் மீண்டும் விண்ணப்பிப்பதற்கு 10 கிழமைகள் காத்திருக்க வேண்டி இருக்கும்.
இதுதொடர்பாக நியாயமான வைகளை அறிய வேண்டுமாயின் எங்களை அழையுங்கள்.

**எவ்வளவு காலத்திற்கு நான் CRB யினைப் பெறலாம்?**

- நீங்கள் செப்டம்பர் 27, 2020 தொடக்கம் செப்டம்பர் 25, 2021 வரை விண்ணப்பிக்கலாம்.
- 2 கிழமைக்கு ஒரு தடவை விண்ணப்பிக்கலாம்.
- ஆகக் கூடுதலாக 13 காலப்பகுதிக்கு விண்ணப்பிக்கலாம்
- முன்னோக்கிய காலப் பகுதிக்கும்விண்ணப்பிக்கலாம். ஆனால் அந்தக் காலப்பகுதி 60 நாட்களுக்குள் இருத்தல் வேண்டும்.

#223-720 Spadina Avenue Phone: (416) 531-0778
Toronto, Ontario M5S 2T9 Fax: (416) 533-0107
www.WorkersActionCentre.org

# கனேடிய இடர்மீட்பு சுகயீன கொடுப்பனவு ( CRSB)

## CRSBக்கு தகுதி பெறுவதற்கு:

☑ கிழமைக்கான நியமிக்கப்பட்ட வேலையில் 50% வீதத்தினை பின்வரும் காரணங்களுக்காக செய்ய முடியாதிருப்பின்:

- கோவிட்டினால் சுகயீனம் அல்லது கோவிட் தொற்று இருக்கலாம்
- கோவிட் காரணமாக தனிமைப்படுத்தலுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருத்தல்
- கொண்டிருக்கும் உடல் நிலையானது கோவிட்-19 தொற்றுவதற்கு ஏதுவாய் இருந்தல்

☑ கனடா இடர்மீட்பு கொடுப்பனவு, கனடா இடர்மீட்பு பராமரிப்பாளர் கொடுப்பனவு, குறுகியகால இயலாமை அல்லது தொழில்தள காயம் காரணமாக நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு அல்லது தொழில் தருனரிடமிருந்து சம்பளத்துடனான சுகயீன லீவு எதனையும் தற்போது பெறவில்லை.

☑ 15 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் கனடாவில் வாழ்கிறேன். கனேடிய பிரஜையாகவோ அல்லது நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவராகவோ இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் சமூகக் காப்புறுதி இலக்கம் (SIN) உண்டு.

☑ 2019ல், 2020ல் அல்லது முன்னைய 12 மாதங்களில் அல்லது சுய வருமானம் அல்லது பிள்ளைப்பேறு/தொழில் காப்புறுதி நன்மைகள் மூலம் ஆகக்குறைந்தது $5,000 வருமானம் ஈட்டினேன்.

### CRSB மூலம் அவ்வளவு பெறலாம்?

ஒரு (01) கிழமைக்கு $500 பெறலாம். இதில் CRA 10% வரியினை பிடித்து வைத்துக்கொண்டு, $450 ஐ ஒவ்வொரு கிழமையும் வழங்கும். நீங்கள் அந்த வருடத்தில் எவ்வளவு வருமானத்தினை உழைத்தீர்கள் என்பதனைப் பொருத்து கூடிய அல்லது குறைந்த வட்டியினை வரி தாக்கலின்போது செலுத்த வேண்டியிருக்கும். கிழமையில் கொஞ்சம் வேலை செய்திருந்தாலும் கூட கிழமைக்கான வேலையில் 50 %த்தை இழந்திருந்தால் நீங்கள் $500 பெறுவீர்கள்.

### எவ்வளவு காலத்திற்கு CRSB யினைப்பெறலாம்?

- நீங்கள் செப்டம்பர் 27, 2020 தொடக்கம் செப்டம்பர் 25, 2021 வரை விண்ணப்பிக்கலாம்.
- ஒரு கிழமை கொண்ட காலப்பகுதிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
- ஒரு கிழமைக்கான காலப்பகுதி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வருகின்ற சனிக்கிழமை வரை
- நீங்கள் தனிமைப்படுத்த லுக்கு அல்லது சுகயீனத்திற்கு 2 கிழமைகளுக்கு மேலாக உட் பட்டிருந்தாலும் CRSB யினை தொடர்ந்தும் பெற முடியாது என அரசு விதி கூறுகின்றது.
- முன்னோக்கிய காலப் பகுதிக்கும்விண்ணப்பிக்கலாம். ஆனால் அந்த சுகயீன காலப்பகுதி 60 நாட்களுக்குள் இருத்தல் வேண்டும்.



#223-720 Spadina Avenue Phone: (416) 531-0778
Toronto, Ontario M5S 2T9 Fax: (416) 533-0107
www.WorkersActionCentre.org

WORKERS' ACTION CENTRE

October 2020

# கனடா இடர்மீட்பு பராமரிப்பாளர் கொடுப்பனவு (CRCB)

## CRCB க்கு தகுதி பெறவேண்டுமாயின்:

☑ 12 வயதுக்குக் குறைந்த குடும்ப அங்கத்தவர் ஒருவரை பராமரிக்க வேண்டியதனால் அல்லது அவருக்கான மேற்பார்வையின் அவசியம் காரணமாக தமது கிழமைக்கான வேலை அட்டவணையில் 50%த்தினை செய்யமுடியாது போதல்.

☑ பின்வருவனவற்றிற்கு கவனம் செலுத்த வேண்டியுள்ளது, ஏனெனில்:

- கோவிட் காரணமாக அவர்களது பாடசாலை அல்லது பராமரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளது அல்லது அவ் வசதிகள் இல்லாமலிருத்தல்.
- கோவிட் காரணமாக அவைகளுடைய வழமையான சேவைகள் இல்லாமலிருத்தல்
- They கோவிட் காரணமாக சுகயீனம் அல்லது அறிகுறி கொண்டிருந்து, தனிமைப்படுத்தப்பட்டு இருத்தல் அல்லது கோவிட் தொற்றக்கூடிய உடல்நிலை ஆபத்தினைக் கொண்டிருத்தல்

☑ குடும்பத்தில் அந்தக் கிழமையில் இந்த நன்மையினை பெறுபவர் இந்த ஒருவரே.

☑ கனடா இடர்மீட்பு கொடுப்பனவு, கனடா இடர்மீட்பு சுகயீன கொடுப்பனவு, குறுகியகால இயலாமை அல்லது தொழில்தள காயம் காரணமாக நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு அல்லது தொழில் தருனரிடமிருந்து சம்பளத்துடனான சுகயீன லீவு எதனையும் தற்போது பெறவில்லை.

☑ 15 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் கனடாவில் வாழ்கிறேன். கனேடிய பிரஜையாகவோ அல்லது நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவராகவோ இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் சமூகக் காப்புறுதி இலக்கம் (SIN) உண்டு.

☑ 2019ல்,2020ல் அல்லது முன்னைய 12 மாதங்களில் அல்லது சுய வருமானம் அல்லது பிள்ளைப்பேறு/ பெற்றோர்தொழில் காப்புறுதி நன்மைகள் மூலம் ஆகக்குறைந்தது $5,000 வருமானம் ஈட்டினேன்.

### CRCB மூலம் எவ்வளவு பெறலாம்?

ஒரு (01) கிழமை காலப்பகுதிக்கு $500 பெறலாம். இதில் CRA 10% வீத வரியினை பிடித்து வைத்துக்கொண்டு, $450 ஐ ஒவ்வொரு கிழமையும் வழங்கும். நீங்கள் அந்த வருடத்தில் எவ்வளவு வருமானத்தினை உழைத்தீர்கள் என்பதனைப் பொருத்து கூடிய அல்லது குறைந்த வட்டியினை வரி தாக்கலின்போது செலுத்த வேண்டியிருக்கும்.

### நீங்கள் எவ்வளவு காலத்திற்கு CRCB யினைப்பெறலாம்?

- நீங்கள் செப்டம்பர் 27, 2020 தொடக்கம் செப்டம்பர் 25, 2021 வரை விண்ணப்பிக்கலாம்.
- ஒரு கிழமை கொண்ட காலப்பகுதிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
- ஒரு கிழமைக்கான காலப்பகுதி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வருகின்ற சனிக்கிழமை வரை
- ஆகக் கூடுதலாக 26 கிழமைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
- முன்னோக்கிய காலப் பகுதிக்கும்விண்ணப்பிக்கலாம். ஆனால் அந்த காலப்பகுதி 60 நாட்களுக்குள் இருத்தல் வேண்டும்.

#223-720 Spadina Avenue
Toronto, Ontario M5S 2T9
Phone: (416) 531-0778
Fax: (416) 533-0107
www.WorkersActionCentre.org